**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**மேட்டூர்.**
**OS.No**. 221/2014
**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஸ்வரி | கணவர் பெயர் | : சரவணன் |
| தகப்பனார் பெயர் | ------ | வயது | : 47 |
| கிராமம் | பள்ளிப்பட்டி | நாள் | : 02.09.2025 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>**முதல் விசாரணை :**</u>

நான் பள்ளிபட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை சார்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் தெரிவிக்கப்பட்ட கூணாண்டியூர் கிராம ச.எண்.31/2 மற்றும் ச.எண்.51/2A ஆகிய சொத்துக்களின் வருவாய் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். **ச.எண்.31/2 மற்றும் ச.எண்.51/2A ஆகிய சொத்திற்குண்டான பட்டா, அ-பதிவேடு, புலவரைபடம், அடங்கல் ஆகியவற்றின் உண்மை நகல் சா.சா.ஆ-1 (Ex.X1) ஆகும்**. மேற்கண்ட ச.எண்.31/2 மற்றும் ச.எண்.51/2A ஆகிய சொத்துக்களின் பட்டா, சிட்டா, அ-பதிவேடு ஆகியவைகள் 1983- 1984 ஆகிய வருவாய் ஆவணங்களில் கணேசன் என்பவர் பெயரில் இருந்தது. தற்போது கணேசன் மகன்கள் குமரேசன், சுப்ரமணி, சரவணன், தனகோடி ஆகியோர் பெயர்களில் உள்ளது. கணேசன் மகன்கள் பெயருக்கு மேற்கண்ட சர்வே எண்கள் உட்பிரிவு ஆன பிறகு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

<u>**குறுக்கு விசாரணை :-**</u>

1) நான் அழைப்பாணையில் சொல்லியுள்ள சொத்துக்களை பார்வையிட்டேனா என்றால் இல்லை. பொதுவாக அனுபவம் மற்றும் பத்திரங்களின் அடிப்படையில் தான் சர்வே எண்களுக்கு உட்பிரிவு எண் கொடுப்போம். தாவா சொத்துக்களுக்க உட்பிரிவு எதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை, சர்வே

அலுவலர்களுக்கு தான் தெரியும். பொதுவாக பட்டாவானது ஆவணங்கள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தான் வழங்கப்படும் என்றால் சரிதான். ச.எண்.31/2 க்கு பட்டாவானது வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது, அதன் பிறகு ஆவணங்கள் அடிப்படையில பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதா என்று நான் கொண்டுவந்துள்ள ஆவணங்களில் குறிப்பு இல்லை. ச.எண்.31/2 ஆனது தற்போது ச.எண்.31/2A, ச.எண்.31/2B என உட்பிரிவு செய்யப்பட்டு தற்போது ச.எண்.31/2B ஆனது கணேசன் பெயரிலும், ச.எண்.31/2A ஆனது கணேசன் மகன்கள் குமரேசன், சுப்ரமணி, சரவணன், தனகோடி ஆகியோர் பெயர்களில் உள்ளது.

2) ச.எண்.31/2 என்ற சொத்தை பொறுத்து நீதிமன்றத்தில் 10 வருடங்களாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்த போது பட்டாவில் பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்றால் சரிதான். நான் தற்போது நீதிமன்றததிற்கு கொண்டு வந்திருக்கும் ச.எண்.31/2A, 51/2A கணினி பட்டாவானது 30.11.2024 ம் தேதியில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட இரண்டு சர்வே எண்களுக்கும் தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த பட்டா எண்கள்.1171 மற்றும் பட்டா எண்.46 என்றால் சரிதான். **மேற்கண்ட பட்டா எண்.1171 சா.சா.ஆ.2 ஆகவும், பட்டா எண்.46 சா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. ச.எண்.51/2A ஆனது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.